**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 268**

**மாவட்டச் செயலகம், கிளிநொச்சி**

---

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010

---

**1. மாவட்டச் செயலகத்தின் முக்கிய பணிகள்**

i. பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தினை பயனுள்ள மட்டத்திற்கு கொண்டு வருதல்.
   - தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச் சீட்டுகளுடன் தொடர்புபட்ட சேவைகள்
   - விவாகம் ஆகோதர்களிற்கான சான்றிதழ்கள் மற்றும் நற் சான்றிதழ்களை வழங்குதல்
   - வேலைத்திட்டத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்
   - மத விவகார மற்றும் ஒழுக்கவியல் மேம்படுத்தல் அமைச்சின் உதவியுடன் மத வழிபாட்டுத் தளங்களை புனரமைப்பதற்கு வசதியளித்தல்.

ii. கணக்கீடு, அறிக்கையிடல் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல் அடங்கலான நிதி நடவடிக்கைகளை வினைத்தறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தல்.

iii. வினைத்திறனுடனான ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயற்பாடுகள்.

iv. பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்புறுத்தல்.

v. விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நெல் முற்பணங்களை வழங்குதல்

vi. அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

vii. மாவட்ட புனர்நிர்மாண புனரமைப்புச் செயற்பாடுகள்

viii. இடம் பெயர்ந்த நபர்களான மக்களிற்கு சேவைகளை வழங்குதல் மற்றும் மீள்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான செயற்பாடுகள்.

ix. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களிற்காக கீழ்க்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்.

x. பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் காணிப் பதிவுச் செயற்பாடுகள்.

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள உதவி அரசாங்க முகவர் அலுவலகங்கள்

(அ) பூநகரி

(ஆ) கரச்சி

(இ) பச்சிலைப்பள்ளி

(ஈ) கண்டாவளி

## 3. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகம் கணக்காண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருந்தது.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த ஏற்பாடும், செலவினமும்

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் நான்கு உதவி அரசாங்க முகவர் அலுவலகங்களிற்கான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 125,925,519 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 122,152,436 பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 3,773,083 ஆன தேறிய ஏற்பாட்டில் 3.00 சத வீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | வருடாந்த மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் | 76,650,000 | 76,650,000 | 74,151,294 | 2,498,706 | 3.26 |
| மூலதனம் | 45,550,000 | 49,275,519 | 48,001,142 | 1,274,377 | 2.59 |
| மொத்தம் | 122,200,000 | 125,925,519 | 122,152,436 | 3,773,083 | 3.00 |

பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

**4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்பிரைகள் மற்றும் பொது நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களிற்கு அமைவாக பேணுதல், தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதும் இப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.

**4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்**

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாவட்டச் செயலகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் புத்தகங்களிற்கு அமைய அமைய கீழ் வரும் (அ) தொடக்கம் (ஈ) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 தொடக்கம் 4.12 வரையிலான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(அ). கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

(i). மாவட்டச் செயலகம் 2011 மார்ச் 31 அளவில் பின்வரும் கணக்குகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

| தலைப்பு இலக்கம் | கணக்குகளின் பெயர் |
|---|---|
| 268 | ஒதுக்கீட்டுக் கணக்கு |

2010 ஆம் ஆண்டிற்காக பொருட் கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 இணங்கி ஒழுகாமை

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நிதிப்பிரமாணங்கள் | | |
| 371(2) | 887,390 | நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக உப கட்டுநிதிகள் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. |
| 396 | 11,686,569 | 6 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப் படாதுள்ள காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1439 ஆம் இலக்க அதி விசேட சுற்றறிக்கை | - | குறித்துரைத்த கொடுப்பனவுகளிலிருந்து முத்திரைத் தீர்வை அறவிடப்பட் டிருக்கவில்லை. |

ஆகையால் மேற்படி இரண்டு கொடுப்பனவுகளும் மோசடியான செலுத்துகைகள் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

4.11 இழப்புகள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் இழப்பு மற்றும் சேத சந்தர்ப்பந்கள் அவதானிக்கப்பட்டன.

| | விடயம் | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| (அ) | மின்பிறப்பாக்கி | 10,000 |
| (ஆ) | லெப்டொப் கணனி | 122,000 |
| | | 132,000 |

**4.12 மனிதவள முகாமைத்துவம்**

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் வெற்றடங்களும்

2010 திசெம்பர் 31 இல் இருந்தபடி பதவியணியினர் எண்ணிக்கை நிலைவரம் வருமாறு

| ஊழியர் வகை | அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 32 | 11 | 21 |
| (ii) இரண்டாம் மட்டம் | 293 | 136 | 157 |
| (iii) ஆரம்ப மட்டம் | 95 | 46 | 49 |
| மொத்தம் | 420 | 193 | 227 |

## 4.13 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க முகவர் அலுவலகங்களினால் உள்ளகக் கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்ப்படுத்தல்

மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க முகவர் அலுவலகங்களினால் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.